1990 ஏப்ரல் 18]

இருக்கிற தாய்களும், சேய்களும் பல்வேறான கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிலே வருகின்ற புகார்கள் எல்லாமே உங்களுக்குத்தான் வரும்போல் தெரிகிறது. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் அரசுக்கு எதுவும் வரவில்லை. அது என்னமோ தெரியவில்லை. பெரும்பாலான புகார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மட்டுமே வருகின்றன. (சிரிப்பு) ஒருவேளை புகார்களுக்குக் காரணமாக அவரே இருப்பாரோ என்ற சந்தேகம் கூட ஏற்படுகிறது. (சிரிப்பு) சுட்டிக்காட்டினால் எந்த இடத்திலே புகார் இருந்தாலும் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரி

*3391 திரு. ஜி.ஜி. குருமூர்த்தி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியார் மாவட்டம், காங்கேயம், மொடக்குறிச்சி கொடுமுடி, பவானி ஆகிய பகுதிகளில் ஏதேனும் ஓர் இடத்தில் கால்நடைக் மருத்துவக்கல்லூரி அமைத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே காங்கேயம் என்று சொன்னாலே, கால்நடைகளில் சிறந்த ஒரு இனம் உற்பத்தியாகின்ற இடம் அது என்பது தெரியும். அதேபோல் பெரியார் மாவட்டம், பர்கூர் இனம் என்று சொல்லப்படுகின்ற ஒரு சிறந்த கால்நடை இனமும் இருக்கக்கூடிய மாவட்டமாகும். எனவே, அங்கே, அந்த மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான முயற்சிகளை மீண்டும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் இனத்தை அழியாமல் காப்பாற்றுவதற்கு அரசின் மூலமாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. அதற்காக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் காங்கேயம் இனத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதுபோன்று பர்கூர் காளைகள் என்ற ஒரு சிறந்த இனம் இருக்கிறது. அது கொஞ்சம், கொஞ்சமாக அழிந்துகொண்டு இருக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் இனத்தையும் அழியாமல் காப்பாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2, தகவல் கோரல்

(அ) பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை தடப்பள்ளி வாய்காலில் தண்ணீர் திறந்து விடாததால் பயிர்கள் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து ஏப்ரல் 15-ஆம் தேதி தடப்பள்ளி அரக்கன்கோட்டை வாய்க் காலில் தண்ணீர் எப்போதும் திறந்து விடப்படுவது வழக்கம். இந்த ஆண்டு தண்ணீர் திறந்துவிடாத காரணத்தால் பருவக் காலத்தில் பயிர் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. விவசாயிகள் சுமார் 24,504 ஏக்கர் நிலங்களில் பயிர் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே இருந்து அமைச்சருக்கும் தகவல் வந்திருக்கலாம். தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கலாம். இருந்தாலும் கூட காளிங்கராயன் பாசனப் பகுதியில் மூன்றாவது போகத்திற்கு பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். எனவே தண்ணீர் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லாமல் 15-ஆம் தேதியன்றே திறந்து விடவேண்டிய தண்ணீரை அந்த வாய்க்காலில் மிக விரைவாகத் திறந்து விடுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.